செய்தி வெளியீட்டு எண்:276 நாள்: 10.08.2021

**ஊரக பகுதிகளில் பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்கிட வேண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்**

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட ஊராட்சிகளில் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.08.2021) ஆய்வு செய்தார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பரிந்தல் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் தேக்கு, ஆலம், புளியங்கன்றுகள், புங்கை, பூவரசு மற்றும் பழக்கன்றுகள் உள்ளிட்ட பல்வேறு வகையான மரக்கன்றுகள் நர்சரி தோட்டத்தின் மூலமாக உற்பத்தி செய்யப்படுவது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்தார். பின்னர், ரூ 3.7 இலட்சம் மதிப்பீட்டில் மண்புழு தொட்டி அமைத்து மண்புழுக்கள் மூலமாக இயற்கை முறையில் மண்புழு உரம் தயாரிக்கப்படுவதை ஆய்வு செய்து, இவ்வகையான இயற்கை உரத்தினை விவசாய பயன்பாட்டிற்கு பெருமளவில் விவசாயிகள் பயன்படுத்திட தக்க முன்னேற்பாடு பணிகளை ஏற்பாடு செய்ய சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, பிடாகம் ஊராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் மட்கும் குப்பை மட்காத குப்பை தரம் பிரித்தல் தொடர்பாக ஆய்வு செய்து, இக்கழிவுகள் மூலம் நுண் உரம் தயாரிக்கப்படுவதற்கு ஊராட்சியில் தனியாக திடக்கழிவு மேலாண்மை மேற்கொள்ள இடத்தினை தேர்வு செய்திட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார். பின்னர், நெய்வானை ஊராட்சியில் பில்ராம்பட்டு கிராமத்தில் ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் ரூ.27.60 இலட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் 315 தனிநபர் குடும்பங்களுக்கு குடிநீர் குழாய் அமைக்கப்பட்டுள்ள பணிகளை ஆய்வு செய்து, ஊரக பகுதிகளில் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் கிடைத்திட வழிவகை செய்திட வேண்டும். முறையாக குளோரின் கரைசலை பயன்படுததி சுகாதார முறையில் குடிநீர் விநியோகம் செய்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

பின்னர், ஏமம் ஊராட்சி மற்றும் வெள்ளையூர் ஊராட்சிகளில் ஊரக உள்ளாட்சி தேர்தலுக்காக பயன்படுத்தப்படவுள்ள வாக்குச்சாவடி மையங்களை பார்வையிட்டு, வாக்களிப்பதற்கு ஏதுவாக முன்னேற்பாடு பணிகளை செய்திடவும் வெள்ளையூர் ஊராட்சியில் ஊரக உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் ரூ.15.45 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுவரும் இரு வகுப்பறைகளுடன் கூடிய ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் கட்டுமானப் பணிகள் குறித்து ஆய்வு செய்து, கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இவ்வாய்வின்போது உளுந்தூர்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.எஸ்.பன்னீர்செல்வம், திரு.பி.சீனிவாசன், ஒன்றிய உதவி பொறியாளர்கள் திரு.வேல்முருகன் மற்றும் திரு.சரவணன் மற்றும் திரு.கோபி, ஒன்றிய பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.